| மேல் மாகாணக் கல்வித் திணைக்களம் |
| --- |
| **ஆண்டிறுதிப் பரீட்சை-** 2019 |
| தரம்: 10 பாடம்: இஸ்லாம் வினாத் தாள்: I நேரம்: 1 மணித்தியாலம் |
| **Marking Scheme** |

**பகுதி- 01**

| வினா இல. | விடை | வினா இல. | விடை | வினா இல. | விடை | வினா இல. | விடை |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| 01. | *1* | 11. | *3* | 21. | *4* | 31. | *2* |
| 02. | *4* | 12. | *4* | 22. | *2* | 32. | *3* |
| 03. | *3* | 13. | *1* | 23. | *1* | 33. | *1* |
| 04. | *2* | 14. | *3* | 24. | *4* | 34. | *2* |
| 05. | *3* | 15. | *2* | 25. | *3* | 35. | *4* |
| 06. | *1* | 16. | *4* | 26. | *2* | 36. | *3* |
| 07. | *2* | 17. | *3* | 27. | *3* | 37. | *4* |
| 08. | *1* | 18. | *2* | 28. | *1* | 38. | *1* |
| 09. | *4* | 19. | *1* | 29. | *4* | 39. | *2* |
| 10. | *2* | 20. | *3* | 30. | *4* | 40. | *3* |

(1 X 40 = 40)

பகுதி- 02

I. நீரின்மை, கடுமையான நோய், குடிப்பதற்கு மாத்திரம் போதுமானளவு நீர் காணப்படுதல்.

II. ஸூரா லுக்மான், ஸூரா ஃபுர்கான்

III. அல்குர்ஆனும் ஸுன்னாவும்

IV. கிதாப்- வேதம், ஹிக்மா- ஞானம்

V. ஹதீஸ்களை மனனமிட்டனர், எழுதிப் பாதுகாத்தனர், தமக்குத் தெரிந்ததை பிறருக்கு கற்றுக் கொடுத்ததனூடாக பாதுகாத்தனர், ஹதீஸ்களை நடைமுறைப்படுத்திப் பாதுகாத்தனர்.

VI. ஹாபில்- பியர்ச்செய்கை காபில்- கால்நடை வளர்ப்பு

VII. புலமை சார்ந்தவை, உடலுழைப்பு சார்ந்தவை

VIII. மனைவியின் தாய், மனைவியின் புதல்வி, மகனின் மனைவி, தந்தையின் மனைவி

IX. இரு தீவிரங்களுக்கிடையில் நடுநிலையான நிலையை ஏற்பது வஸதிய்யா எனப்படும்.

X. முதன்மைப்படுத்தப்பட வேண்டிய சட்ட நோக்கு (2 X 10 = 20)

02. I. மொழிக் கருத்து: பரிசுத்தப்படுத்தல், சீர்படுத்தல்

இஸ்லாமிய பரிபாஷையில் உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்துதல் எனப்படும். (02 புள்ளிகள்)

II. முகஸ்துதி, பொறாமை, பெருமை போன்றவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளல், பர்ளான கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றல், நபிலான வணக்கங்களில் ஈடுபடல், திக்ர்களில் ஈடுபடல், அதிகம் அல்குர்ஆன் ஓதுதல், தவ்பா செய்தால் (ஏதாவது மூன்று விடயங்கள் எழுதப்பட்டிருந்தால் 3 புள்ளிகள்)

III. அல்லாஹ் என்றென்றும் ஜீவித்திருப்பவன், நிலையானவன், அவனுக்கு உறக்கம் கிடையாது, வானங்கள், பூமியிலுள்ளவை அவனுக்கே உரியன, படைப்பினங்களுக்கு முன்னருள்ளவற்றையும் பின்னருள்ளவற்றையும் அவன் நன்கறிந்தவன்... (போன்ற ஐந்து பண்புகள் குறிப்பிடப்பட்டிருந்தால் 5 புள்ளிகள்)

(மொத்தம்: 2+ 3+ 5= 10)

03. I. கோட்பாட்டு ரீதியானவை, நடைமுறை சார்ந்தவை (02 புள்ளிகள்)

II. தூண எண்ணம், அடிப்படை வணக்க வழிபாடுகளுக்கு தடையில்லாதிருத்தல், ஷரீஅத்தின் வரையறைகளை மீறாதிருத்தல் (3 புள்ளிகள்)

III. தெய்வீகத்தன்மை, எவருக்கும் அநீதி இழைக்காமை, நெகிழ்வுத்தன்மை, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை சீர்செய்தல், சமூக நலனுக்கும் தனி மனித நலனுக்குமிடையே இணக்கம் காணல், ஆத்மிக, லௌகிக தேவைகளை கவனத்திற் கொள்ளல்... (இவற்றில் ஏதாவது ஐந்தைக் குறிப்பிட்டு விளக்கியிருப்பின் 5 புள்ளிகள்)

(மொத்தம்: 2+ 3+ 5= 10)

04. I. நூஹ் (அலை), மன்னன் துல்கர்னைன் (02 புள்ளிகள்)

II. வாங்குவோன்- விற்போன், வியாபாரப் பொருள், ஈஜாப்- கபூல் (மூன்றும் குறிப்பிடப்பட்டிருந்தால் 3 புள்ளிகள்)

III. உயிர் வாழ்வதற்கான உரிமை, சமத்துவத்துக்கான உரிமை, தனி மனித சுதந்திரத்துக்கான உரிமை, நீதி பெறுவதற்கான உரிமை, கண்ணியத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கான உரிமை, சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான உரிமை, மத உணர்வுகளுக்கு பாதுகாப்பு வழங்கும் உரிமை (இவற்றில் ஏதாவது ஐந்தைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்கியிருப்பின் 5 புள்ளிகள்)

(மொத்தம்: 2+ 3+ 5= 10)

05. I. குலுக் ஹஸன், அ.்.லாக் ஹஸனா, அதப்/ஆதாப், மகாரிமுல் அ.்.லாக் (02 புள்ளிகள்)

II. இறைவனுக்கு என்ற தூய எண்ணத்துடன் தவ்பா செய்தல், தான் செய்த பாவங்களை விட்டும் முற்று முழுதாக நீங்குதல், தான் செய்த பாவங்களை எண்ணி வருந்தி அதற்காக கைசேதப்படுதல், செய்த பாவம் சக மனிதனோடு தொடர்புபட்டிருந்தால் அவனிடம் மன்னிப்பு வேண்டிய நிலையில் இறைவனிடம் நெருங்குதல் (இவற்றில் மூன்று குறிப்பிடப்பட்டிருந்தால் 3 புள்ளிகள்)

III. வஹி கைரு மத்லுவ் என்றால் ஓதிக் காண்பிக்கப்படாத வஹியாகும். இவை பல்வேறு நிலைகளில் இறைதூதர்களுக்கு கிடைக்கப் பெற்றன.

உதாரணங்கள்: - இப்றாஹீம் (அலை) அவர்கள் தனது மகன் இஸ்மாயீலை குர்பான் செய்வதாக கண்ட உண்மைக் கனவு

- மூஸா (அலை) அவர்களுடன் துர்ஸினா மலைப் பக்கத்தில் அசரீரி மூலம் இறைவன் உரையாடியமை

- ஸகரிய்யா (அலை) அவர்களுக்கு சமிக்ஞை மூலம் அல்லாஹ்வைத் தொழவும் புகழவும் கற்றுக் கொடுக்கப்பட்டமை

- நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் ஹதீஸ் / ஸுன்னா (5 புள்ளிகள்)

(மொத்தம்: 2+ 3+ 5= 10)

06. I. இபாதத் என்பதன் மொழிக் கருத்து வணங்குதல், அடிபணிதல், கட்டுப்படுதல் என்பதாகும். இஸ்லாமிய வழக்கில் இபாதத் என்பது, அல்லாஹ் எமக்கு ஏவியவற்றை எடுத்து நடப்பதனூடாகவும் தடுத்தவற்றை தவிர்த்து நடப்பதனூடாகவும் அவனுக்கு கீழ்ப்படிந்து நடப்பதாகும். (02 புள்ளிகள்)

II. உள்ளத்தைப் பக்குவப்படுத்தி இறையச்சத்தை ஏற்படுத்தல், இறை நெருக்கத்தை ஏற்படுத்தல், பாவ காரியங்களிலிருந்து தவிர்ந்து வாழ பயிற்றுவித்தல், தியாகம், பொறுமை, பிறர் நலன் பேணல் போன்ற நற்பண்புகளை வளர்த்தல், இறை திருப்தியைப் பெற்று சுவனம் நுழைய வழியமைத்தல்… (இவற்றில் ஏதாவது மூன்று குறிப்பிடப்பட்டிருந்தால் 3 புள்ளிகள்)

III. தயம்மும் என்பது கடமையான வுழுவுக்காகவோ குளிப்புக்காகவோ நீரைப் பயன்படுத்த் முடியாதபோது அதற்குப் பதிலாக சுத்தமான மண்ணைப் பயன்படுத்தி முகம் மற்றும் இரு கைகளை மஸ்ஹு செய்வதைக் குறிக்கும்.

ஜபீரத் என்பது உடலுறுப்புக்களில் காயம் ஏற்பட்டதற்காகப் போடப்படும் கட்டு அல்லது பிளாஸ்டரைக் குறிக்கும். வுழு செய்த நிலையில் வுழுவுடைய உறுப்புக்களில் ஜபீரத் போடப்பட்டிருந்தால் அதனைக் கழுவுவதற்குப் பதிலாக தயம்மும் செய்து கொள்ளலாம். (5 புள்ளிகள்)

(மொத்தம்: 2+ 3+ 5= 10)

**இறுதிப் புள்ளி:** **வினாப் பத்திரம் 01 (40 புள்ளிகள்)**

**வினாப் பத்திரம் 02 (முதலாம் வினா- 20 புள்ளிகள்)**

**(ஏனைய நான்கு வினாக்களுக்கு- 40 புள்ளிகள்)**

**மொத்தம் (100 புள்ளிகள்)**